

கடலூர் கிழக்கு மாவட்ட அவைத்தலைவரும், முன்னாள் கடலூர் நகர செயலாளரும், கடலூர் முன்னாள் நகராட்சி தலைவருமான, து. தங்கராசு, வயது முதிர்வு காரணமாக இயற்கை எய்தினார். அன்னாரது உடலுக்கு கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான, எம்.ஆர் .கே. பன்னீர்செல்வம், கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். உடன் மாநில நிர்வாகிகள்,முன்னாள் , இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் .மாவட்ட, ஒன்றிய, மாநகர, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினர்.

### வேளாண்துறை மூலம் அனைத்து கட்டமைப்புகளையும் உருவாக்கித் தருவோம்!

# 4 ஆயிரம் தள்ளுவண்டிகள் மூலம் காய்கறிகள் விற்பனை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தகவல்!

**சென்னை, ஏப்.21-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இந்த நிதி நிலை அறிக்கையில் 4 ஆயிரம் தள்ளுவண்டிகள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தெரிவித் துள்ளார்.**

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ண மூர்த்தி:** தஞ்சை மாவட் டத்திற்கு அடுத்ததாக நெல் உற்பத்தியில் திரு வண்ணா மலை மாவட்ட மானது இரண்டாவது மாவட்டமாக உள்ளது. சிறப்பான முறையில் நெல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

போளூர் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற போளூர், சேத்துப்பட்டு ஆகிய பகுதிகளில் அதிக மான நெல்வரத்து காரண மாக, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விற்பனைக் கூடங்களில் விவசாயிகள் கொண்டு வருகின்ற நெல் மூட்டைகள் இயற்கைச் சீற்றங்களினாலும், கடு மையான மழையினாலும் பாதிக்கப்படுகின்றன. அந் தப் பாதிப்பினைத் தவிர்க் கின்ற வகையில் அங்கு கூடுதல் godown கட்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** திருவண் ணா மலை மாவட்டத்தில் நெல் அதிகமாக உற்பத்திச் செய்கின்றார்கள். குறுவை தொகுப்போடு, இந்த budgetல் nondelta பகுதிக ளுக்கு குறுவை தொகுப்பு வழங்க வேண்டுமென்று, முதலமைச்சர் அவர்கள் ரூ.102 கோடியினை ஒதுக் கியிருக் கிறார்கள்.

திருவண்ணா மலை மாவட்டம் வேளாண்மை யில் செழித்து வருகிறது. நெல் பயிரினையும் உற் பத்தி செய்கிறார்கள்; கரும்பையும் உற்பத்திச் செய்கிறார்கள்; தோட்டக் கலைப் பயிர்களான பூக்க ளையும் உற்பத்திச் செய்கி றார்கள். வேளாண் துறையின் மூலமாக மாவட்டத்திற்குரிய அனைத்து கட்டமைப்புக ளையும் நாங்கள் உரு வாக்கி தருவோம் .

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** திருச்சிராப்



பள்ளி (கிழக்கு) சட்ட மன்றத் தொகுதிக்குட் பட்ட பெரும்பாலான மக் கள் Gandhi Marketஐ நம்பி வாழ்ந்து வருகின்றனர். மிகவும் வறுமைக்கோட் டிற்குகீழ் வாழ்வதால், தங் கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள காய்கறி வியாபாரம் செய் வதற்கு அரசு வழங்கும் நடமாடும் காய்கறி தள்ளு வண்டியினை வழங்க பரிந்துரை செய்யுமாறு,

150க்கும் மேற்பட்டவர் கள் கோரிக்கை மனு அளித்துள்ளனர். அந்த மனுவினை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கொடுத்துள்ளேன். தமிழக அரசு, தோட்டக்கலை மற் றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பிலே ஒருங் கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் மானிய விலையில் நகரும் காய்கறி விற்பனை வண்டியினை 25 பேருக்கு கடந்த வரு டம் வழங்கினீர்கள்.

அதைப்போல வறு மைக்கோட்டிற்குகீழ் வாழ்ந்துவரும் காய்கறி வியாபாரம் செய்கிற வர்க ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள அரசு வழங்கும் நடமாடும் காய்கறி வண்டியினை வழங்க இந்த வருடம் ஆவன செய்வாரா?

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன் னீர்செல்வம்:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் காய் கறி வியாபாரம் செய்வ தற்கு தள்ளுவண்டி வேண் டுமென்று கேட்டிருக்கி றார்கள். இந்த ஆண்டிற் கான நிதிநிலை அறிக்கை யிலே 4 ஆயிரம் வண்டி கள் இந்த ஆண்டு வழங்கப்படும் என்று அறி விக்கப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் அவர் கேட்டிருக்கின்ற பகுதிக்கு தேவைக்கேற்ப கொடுக் கப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### வேலூர் – சலவன்பேட்டை பகுதி சார்பில்

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் பொதுக் கூட்டம்!

## கதிர் ஆனந்த் எம்.பி.–ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

வேலூர், ஏப்.21-

வேலூர் மாநகரம் சல வன்பேட்டை பகுதி திமுக சார்பில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக பொதுக்கூட்டம் நடந்தது.

இதில் 772 பேருக்கு இல வச சேலை மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டது. வேலூர் மாநகர திமுக சலவன்பேட்டை பகுதி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு பகுதிகழக செயலாளர் வி.ஜி .கே. சுந்த ரவிஜி தலைமை தாங்கி னார்.

கூட்டத்தில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ., மாநக ராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார்மற்றும் தலைமை கழக பேச்சாளர் கள் கந்திலிகரிகாலன் கழிஞ்சூர் கண்ணன் , ஆகி யோர் முதலமைச்சர் தள பதி மு.க.ஸ்டாலின் திரா விட மாடல் ஆட்சியில் செயல் படுத்தப்படும் சாதனைகளை விளக்கி பேசினார்கள்.

அதைத்தொடர்ந்து 772ஏழை பெண்களுக்கு இலவச சேலைகள் மற்றும் நலத் திட்ட உதவிகளை மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்எல்ஏ வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாநகர துணை செயலாளர்கள் முன்னா ஷெரீப், ஒய். தேவநேசன், பகுதி கழக செயலாளர்கள் பாலமுரளி கிருஷ்ணா, சத்திய மூர்த்தி, ஆர்.இ.பி. சசிக்குமார், எம்.ஏ. கணேஷ்சங்கர்

மண்டல குழு தலைவர் கள் வீனஸ் நரேந்திரன், யூசுப் கான் வட்ட செயலா ளர் பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

முடிவில் பகுதி துணை செயலாளர் வெற்றி செல்வி நன்றி கூறினார்.



கடலூர் மாவட்டம், நெய்வேலி என்.எல்.சி தொழிற்சங்கம் அங்கீகாரம், ரகசிய வாக்கெடுப்பு தேர்தலில் , தொ.மு.ச வரிசை எண் 6ல், போட்டியிடுகிறது ,. என்.எல்.சி புதிய சேவை பகுதி, நுழைவு வாயில் அருகில், சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ, தலைமையில் ,தொ.மு .ச.வினர், பணி முடிந்து திரும்பும் தொழிலாளர்களிடம் வாக்கு சேகரித்தனர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னி யன், மாவட்ட பொருளாளர் ஜி .தண்டபாணி ,பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி , நகர செயலாளர் வி.குருநாதன், தொ.மு.ச,தலைவர் பா.திருமாவளவன், அலுவலக செயலாளர் ஜெரால்டு ,முன்னாள் நிர்வாகி வீர .இராமச்சந்திரன், மற்றும் தொ.மு.ச துணைத் தலைவர் கள் ,பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் ,பேரவை பொதுக்குழு உறுப்பினர்கள் ,சி .பி .எஃப். இயக்குனர்கள் ,காண்ட்ராக்ட் சங்க நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நீட் தேர்வை கொண்டு வந்த பா.ஜ.க.வுக்கு எதிராகவும் அவர்களுடன் கூட்டணி வைத்து நாடகமாடும் அ.தி.மு.க இரட்டை வேடத்தை மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டும் வகையில் நெல்லை கிழக்கு மாவட்டம் களக்காடு நகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை முன்பு நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு முன்னிலையில் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞான திரவியம்,சித்திக்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், களக்காடு தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜன்,நாங்குநேரி மேற்கு ஒன்றிய செயலாளர் சுடலை கண்ணு,மாவட்ட துணைச் செயலாளர் நம்பி,களக்காடு நகர செயலாளர் மணி சூரியன்,நகர் மன்ற தலைவர் சாந்தி சுபாஷ், மற்றும் கசமுத்து,கருப்பசாமி பாண்டியன், ஜின்னா,மைதீன்,அருணாசலம் என்ற வெள்ளையன்,ஐயப்பன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். நிறைவில் ஒன்றிய அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

### பென்னகரில் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

# பிரதமர் மோடியை எதிர்க்கும் துணிச்சலான முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேச்சு

செஞ்சி, ஏப்.21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்ட மன்ற தொகுதி வல்லம் வடக்கு ஒன்றிய திமுக சார் பில் தலைவர்,தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் 72 ஆவது பிறந்த நாள் விழா மற்றும் திமுக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் பென்ன கர் கலைஞர் திடலில் நடை பெற்றது.

கூட்டத்திற்கு வல்லம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை தலைமை தாங்கினார்.ஒன்றிய கழக நிர்வாகிகள் ஏழுமலை, பெருமாள், ராஜலிங்கம் , மணிமேகலைரவிச்சந்தி ரன், ஞானமூர்த்தி, திருநா வுக்கரசு, ரவிச்சந்திரன், ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதி நிதி பிரபாகரன் அனைவ ரையும் வரவேற்றனர்.

கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சன்.சங் கர்,விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ .கலந்துகொண்டு திமுக அர சின் சாதனைகளைஎடுத்து ரைத்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப் பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பேசுகையில்:

திமுக தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான் காண்டு காலத்தில் தமிழ் நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.முதலமைச்ச ரின் மகளிருக்கு விடியல் பய ணத்திட்டம் மகளிர்உரி மைதிட்டம் என தேர்தல் வாக்குறுதியில் சொன்ன திட்டங்களையும் சொல் லாத திட்டங்களை யும் செய்து இந்தியாவுக்கே முதன்மை முதலமைச்சராக திகழ்ந்து வருகிறார்.

ஆனால் ஒன்றிய பாஜக மோடி தலைமையிலான அரசு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய வில்லை வெளிநாட்டில் பதுக்கி உள்ள கருப்பு பணத்தை மீட்டு இந்தியா வில் உள்ளவர்களின் வங்கி கணக்கில் செலுத்துவேன் என தெரிவித்தார் 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவேன் என தெரிவித் தார்சொன்ன திட்டத்தை எதையும் செய்யாமல் பத்து பணக்காரர்கள்வாங்கிய கடனை முழுமையாக தள் ளுபடி செய்தவர் பிரதமர் மோடி.

100 நாள் வேலை செய் யும் தொழிலாளர்கள் வஞ் சிக்கப்படுகிறார்கள் 100 நாள் வேலை திட்டத்திற்கு வழங்க வேண்டிய நிதியை மறுத்து வருகிறார்பிரதமர் மோடி

கல்வித்துறைக்கும் ஊரக வளர்ச்சி துறைக்கும் ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடி யாக வழங்க வேண்டும் என முதலமைச்சர்கோரிக்கை வைத்துள்ளார் .ஆனால் முதலமைச்சர் கேட்ட நிதியை பிரதமர் மோடி வழங்காமல் மறுத்து வருகி றார்.வெளிநாட்டில் கச்சா எண்ணெய் குறைந்துள்ளது ஆனால் இந்தியாவில் பெட்ரோல் டீசல் சிலிண் டர் விலையைஉயர்த்தி ஏழைகளுக்கு விரோதமான ஆட்சியை நடத்திவரும் பிரதமர் மோடிஏழை எளிய மக்களின் தலையில் ஜிஎஸ்டி வரி சுமத்துகிறார் ஒட்டுமொத்த ஏழைகளின் பணத்தை சுருட்டி பத்து பணக்காரர்கள் ஆட்சி செய்ய மோடி அரசு செயல் பட்டு வருகிறது மக்களுக் காக குரல் கொடுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க . ஸ்டாலின் தமிழ்நாட் டிற்காகவும் தமிழ் மக்களுக் காகவும் போராடக்கூடிய தைரியமானசெயலுடன் இந்தியாவிலேயே மோடியை எதிர்க்கும் துணிச்சலான முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் எனவிழுப் புரம் வடக்கு மாவட்ட கழ கபொறுப்பாளர்செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தெரி வித்தார்.

தொடர்ந்து மும்மொழி கொள்கை மூலம் தமிழ் நாட்டில் இந்தியை திணிக் கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும் தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என திமுக நிர்வா கிகள் உள்ளிட்ட ஆயிரத் துக்கும் மேற்பட்ட பொது மக்கள் உறுதி மொழியை ஏற்றுக்கொண்டனர்.

இதையடுத்து ஆயிரத் துக்கு மேற்பட்ட நண்பர்க ளுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான எம்எல்ஏ நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி ,மாநில தீர்மான குழு உறுப் பினர் செஞ்சி சிவா ,மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர்,வல்லம் ஒன் றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செய லாளர்கள் துரை ,இளம்வ ழுதி, தழுதாளிசெழியன் ,மாவட்ட அணி அமைப் பாளர்கள் துணை அமைப் பாளர்கள் தமிழரசன், அன்பு செழியன், பன்னீர் செல்வம், கிருஷ்ணமூர்த்தி, கோபாலகிருஷ்ணன், பிரபு, சந்திரன், சங்கர்,ஒன்றிய குழு உறுப்பினர்கள் கோமதி பிரபாகரன், இந்து மதி வெற்றிவேல் அமிர்தம் அரிகிருஷ்ணன்,ஊராட்சி மன்ற தலைவர்கள் ஏ.பி .சம் பத் ,சக்திவேல், மகேஷ்,தன சேகரன், ஊராட்சி நிர்வாகிகள் சின்னசாமி, ராஜேந்திரன், ராமமூர்த்தி, கன்னியப்பன், ஸ்டாலின், ரவிச்சந்திரன் ,காமராஜ், , உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் ஒன்றிய இளைஞரணிஅமைப்பாள ரும் பென்னகர் ஊராட்சி மன்ற தலைவர் ராஜ் அனை வருக்கும் நன்றி கூறினார்.

# திருவள்ளூர் மத்திய மாவட்ட தொண்டர் அணி சார்பில் இறகுப்பந்து போட்டி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பரிசு – கோப்பைகள் வழங்கினார்!

திருவள்ளூர், ஏப்.21-

திருவள்ளூர் மத்திய மாவட்ட தொண்டரணி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காக்க லூர் ஊராட்சி மப்போசி சாலையில் உள்ள இறகுப் பந்து விளையாட்டு அரங் கில் மாபெரும் இறகுப் பந்து போட்டி ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் மாவட்ட தொண்டரணி அமைப்பா ளர் எஸ்.சௌந்தரராஜன் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் மாவட்ட தொண் டரணி நிர்வாகிகள் பி சுரேஷ்குமார், திருலோக சுந்தர், வி. எஸ் ஸ்ரீதர் ,சாதிக் அகமது , கார்த்திக் , தாஸ், கதிரவன், ஆகியோர் வர வேற்புரை ஆற்றினார்கள்

ஒன்றிய கழக நிர்வாகிகள் த.எத்திராஜ், கே.கே.சொக்க லிங்கம், கே.தரணி, டி. கே.சீனிவாசன், டி.தயாளன், கிளைக் கழகச் செயலாளர் எம்.பி.பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் முன்னிலை வகித் தார்கள்

இந்நிகழ்ச்சியில் திரு வள் ளூர் காஞ்சிபுரம் சென்னை செங்கல்பட்டு பகுதியில் இருந்து அறுபதுக்கு மேற் பட்ட விளையாட்டு வீரர் கள் பங்கேற்றனர் இதில்

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையி னர் நலன் மற்றும் வெளி நாடு வாழும் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து இறகுப்பந்து விளை யாட்டு வீரர்களுடன் சிறிது நேரம் விளையாடி மகிழ்ந்தார்

பின்னர்முதல் வெற்றி பெற்ற வீரருக்கு 25 ஆயிரம் ரூபாயும் இரண்டாவது வெற்றி பெற்ற வீரருக்கு 15 ஆயிரம் ரூபாவும் மூன்றா வது வெற்றி பெற்ற வீரருக்கு பத்தாயிரம் ரூபாய் மற்றும் பங்கேற்ற வீரர்களுக்கு ஆறு தல் பரிசு கோப்பைகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப் பினர்கே.ஜெ.ரமேஷ், மாவட்டத் துணைச் செய லாளர் எஸ்.ஜெயபாலன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்டி. கே.பாபு,

வி.தியாகராஜன், சுரேஷ் குமார், திருலோகசுந் தர்,ஸ்ரீதர்,சாதிக்அகமது,சர வணன், முருகன், கிறிஸ் டன்,செந்தில்,சதீஷ்,சிவாபி ரகாஷ், சேதுபதி, கார்த்திக், சரண்ராஜ்,சூரி, பாலாஜி, உள்படநிர்வாகிகள்பலஉள் ளனர்முடிவில் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பா ளர் கே எஸ் எழிலரசன் நன்றி கூறினார்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கள்ளக்குறிச்சி நகராட்சியில், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் சு.பிரகாஷ் தலைமையில், நீட் தேர்வை தமிழ்நாட்டில் அனுமதித்து மாணவ, மாணவியரின் உயிரை பறித்த, இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம்,கல்வி நிதி மறுப்பு மற்றும் தொகுதி மறுசீரமைப்பு என பா.ஜ.க.அரசின் அனைத்து துரோகங்களுக்கும் துணை நின்று கூட்டணி அமைத்துள்ள அடிமை அ.தி.மு.க.வின் முகத்திரையைக் கிழிக்கும் வண்ணம் பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் வழங்கினார்கள், இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்த நிர்வாகிகள் கார்த்தி கேயன், இந்திரா, மகேந்திரன், ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.